அந்தோவறனேயெனவழைப்பார்களை
வந்தோமெனச்சொல்லிவாங்குபவரில்லை
வெந்தேவிளிந்துமொழியார்விழுத்துயர்
முந்தேவினையமுயன்றனர்புக்கார். (௬௧)

அன்னணம்வேதனையெய்துமவர்களைத்
துன்னியுளர்சிலர்தூர்த்தத்தொழிலவர்
முன்னதிற்செய்தவினையின்முறைபல
வின்னணமெய்துமினென்றிடர்செய்வார். (௬௨)

தங்கிருட்போதிற்றலைச்சென்றயன்மனை
யங்குமகிழ்ந்தாளவளிவள்காணெனச்
செங்கனலேயெனவெம்பியசெம்பினிற்
பொங்கனற்பார்வைகள்புல்லப்புணர்ப்பார். (௬௩)

கொள்ளுமிவையெனக்கூட்டில்வளர்த்ததம்
வள்ளுகிர்ப்பேழ்வாய்ஞமலிவடிவுக
ளள்ளிக்கதுவவலறியயலது
முள்ளிற்புனைமரமேறமுயல்வார். (௬௪)

மேயப்பருவம்விரும்பியமீனினங்
காயப்பெருந்தடிகாண்மினிவையெனத்
தீயைப்பருகியசெப்புத்திரளவை
வாயைப்பெருகப்பிளந்துமடுப்பார். (௬௫)

மதிப்பலகொன்றுமடப்பிணைவீழ்த்துங்
கதிப்பலவெஃகிக்கறித்தவர்தம்மை
யுறுப்புறுப்பாகவரிந்தரிந்தூட்டி
யொறுப்பர்சிலரயவருமொருபால். (௬௬)

இடைப்பலசொல்லியெளியவர்தம்மை
யுடைப்பொருள்வெஃகியொறுத்தபயத்தான்
முடைப்பொலிமேனியைமுண்மத்திகையாற்
புடைப்பநடுங்கிப்புரள்வரொருசார். (௬௭)

வெறுப்பனவேசெய்துமேலாயவரைக்
குறிப்பலசொல்லியநாவைக்கொடிற்றாற்
பறிப்பர்பரியவயிரமுட்கொண்டு
செறிப்பருகில்வழியேறச்சிலரே. (கூஅ)

பொரிப்பர்சிறைசெய்துபொங்கெரிமாட்டிக்
கரிப்பரகல்படுகாரகலேற்றித்
திரிப்பர்பலரையுஞ்செக்குரலுட்பெய்
துரிப்பருடலையவருமொருபால். (கூகூ)

பழுப்பலபற்றிப்பறிப்பர்பதைப்ப
மழுப்பலகொண்டவர்மார்பம்பிளப்பர்
கழுப்பலவேற்றியகைப்பர்கடிதே
விழுப்பெரும்பூணெய்வினையின்விளைவே. (க00)

பறிப்பர்பலரவர்கைகளைப்பற்றிச்
செறிப்பர்விரல்களைச்சீவுவர்மேனி
நெறிப்பரெலும்புநிரந்துடன்வீழ
மறிப்பர்மலைமிசைமற்றுமொருசார். (க0க)

சாவகலிந்திடுந்தண்ணீர்ப்பிணிபெரி
தாவென்றலறுமவரையருநஞ்சின்
வாவிகள்காட்டலின்மண்டிமடுத்துண்டு
நாவுமழுகநரல்வரொருசார். (க0உ)

அழலிவையாற்றேமெனவழன்றோடி
நிழலிவையாமெனநீள்பொழிற்புக்காற்
றழல்வளிதாமேதலைவழிசிந்தக்
கழல்வனர்வீழ்ந்துகரிவரொருசார். (க0ங)

முல்லைமுகைமலர்த்தாரோய்முதற்புரை
யல்லலெனப்பலவாயிரகோடிக்
ளெல்லையிறுன்பமிவற்றினிருமடி
புல்லினர்கீழ்க்கீழ்புரைபுரைதோறும். (க0ச)

விளிவிறுயரொடுமேற்பொங்கிவீழு
மளவுமவர்கண்முறையும்பிறவு
மளவிலகீழ்க்கீழிரட்டியறைந்தே
னுளரொளிஞானமஃதொன்றுமொழித்தே. (க0ரு)

பெய்யாவருகஞ்சும்பேரழற்குட்டமுஞ்
செய்யாக்குழிகளுஞ்சீர்த்தடங்களு
ணையாநரகரிடமிவைநாறினு
முய்யாபிறவுயிரோசனைக்கண்ணே. (க0சு)

எழுவின்முழமூன்றறுவிரலென்ப
வழுவின்முதலதன்கீழ்ப்புரைவாழ்வா
ரொழிவிலபொங்குவரோசனையேழ்மேன்
முழுவிலைஞ்ஞூற்றொடுமுக்காவதமே. (க0எ)

ஆண்டுச்சிறுமைபதினுயிரமுள
நீண்டவர்வாழ்நாணிறைவு * கடலெல்லை
யீண்டிதன்கீழ்க்கீழ்ப்பெருகிவருமெங்கும்
வேண்டிற்சிறுமைதம்மேலோர்நிறைவே. (க0அ)

மூன்றுமொரேழுமொழிபஃதும்பத்தினோ
டேன்றநல்லேழுமிருபத்திரண்டுமென்
றுன்றவலைகடன்முப்பத்துமூன்றுமென்
றான்றினகீழ்க்கீழுயர்ந்தனவாழ்நாள். (க0கூ)

முடைகொண்முழுச்செவிமொண்பற்பதக
ருடையந்தலியிருப்புண்பதுநஞ்சே
புடையவர்காணியபோர்நனிமூட்ட
மிடைவர்படுகொண்டுவேதனைமிக்கார். (கக0)

வேவாரழலுள்விளியாரளற்றினு
ளோவார்புகையுளுங்கையாவுழல்பவ
ராவாவளியநரகர்படுதுய்
ரேவார்சிலையாயிரங்குந்தகைத்தே. (ககக)

* கடல்—சமுத்திரம், அஃதோரெண்.

ஆங்குண்டெனப்படுமாழ்துயர்வீழ்பவர்
தேங்கொண்டபைந்தார்த்திறன்மன்னயாரெனிற்
றூங்கொண்டதாரமறுத்துப்பிறன்வரைப்
பூங்கொண்டமாரைப்புணருமவரும். (கக௨)

உள்ளங்கொடியாருயிர்க்கொலைகாதலர்
வெள்ளங்கொடியனமேவிப்பிறன்பொருள்
கொள்ளுங்கொடுமைக்குணத்தின்கனித்தரு
கள்ளலர்ச்சாய்த்தோய்நரகமடைவார். (கக௩)

நல்லறங்காய்ந்துநலிந்துபொருள்படைத்
தில்லறஞ்செய்யாதிருகுபவர்களும்
புல்லறம்புல்லாப்புலவனைவைதுரைத்
தல்லறஞ்செய்யுமறிவில்லவரும். (கக௪)

தெண்டிரைவாழுந்திமிலுங்கலங்களுங்
கொண்டிரையாகவுயிர்கொல்லுஞ்சாதியுங்
கண்டிடுகாதனைநின்னுற்செயப்படுக்
தண்டிடம்மொடுஞ்சார்த்தினைகொண்ணீ. (கக௫)

ஆறுநரகவழியினுளாழ்பவர்
தேறுார்திருவறந்தேறினுநல்வத
மேறுார்சிலர்நனியேறினுநில்லலர்
வேறுயினிச்சொல்லவேண்டுவதுண்டோ. (கக௬)

விலங்குகதித்துன்பம்.

விலங்குடன்சாதிவிரிப்பிற்பெருகு
முலங்கொண்டதோண்மன்னவோவறிவாதி
புலங்கொண்டவைம்பொறியீறுப்புணர்ந்த
கலங்கொண்டஞாலத்தினுடியுணர்நீ. (கக௭)

நின்றுவருந்து * நிகோதப்பிறவியு
ளொன்றறிவெய்தியுழக்குமுயிர்பல
வன்றிச்சிறிதுண்டவற்றினுமவ்வழிச்
சென்றுபெயர்வசிலவுங்கண்டாய். (கக௮)

---

* நிகோதம்—விலங்கு.

ஓரறிவாகியுழக்குமுயிர்களைப்
பேரறிவாரும்பிறரில்லையின்னவை
யாரறிவாரழியுந்திறம்யாதெனிற்
கூரறிவில்லவர்கொன்றிடுகின்றார். (கககூ)

உயிர்த்தொகையாறனுளொன்றொழித்தேனைப்
பெயர்த்தொகைபெற்றபிறவிகடம்மைப்
பயிர்த்தலுமின்றியுலகம்பதைப்பச்
செயிர்த்தவர்போலச்செகுத்திடுங்கண்டாய். (கஉ௦)

ஏனையொழிந்தவியங்குநற்சாதிக
ளானைமுதலாவளியவிலங்குகண்
மானுடர்பற்றிவலிந்துநலிந்திட
வூனெய்யுருகுமுழக்குமொருபால். (கஉக)

ஊர்ந்துமுழுதுமுறுபாரமேந்தியுஞ்
சாய்ந்தவிலங்குகடாளுடைந்தாழ்தர
வீர்ந்துமறுத்துமிறைச்சியுவப்பவர்
தேர்ந்துசெகுப்பவுந்தேயுஞ்சிலவே. (கஉஉ)

தடிவிலைவாழ்நர்தடிந்திடப்பட்டு
முடிவிலைவாழ்நர்முருக்கமுரிந்துங்
கொடுவிலெயினர்கள்கொல்லக்குறைந்தும்
விடலிலவேதனைவேந்தவிலங்கே. (கஉங)

அந்தோவளியவிலங்குகள்யார்கண்ணு
ணொந்தோமெனச்சென்றுநோக்கினுனிப்பொடு
வந்தோமெனநின்றமாண்புடையார்களு
முய்ந்தோய்ந்தொழியமுயன்றிடுகின்றார். (கஉச)

கன்னியர்வேட்கைகடவுளரும்பிணி
துன்னியதுன்பவிலங்கினசூடுதுய
ரென்னுமிவற்றினையெம்போல்பவரன்றி
மன்னவறிபவர்மற்றில்லைமன்னே. (கஉரு)

வலியமுழங்கினுநாயினும்வட்கி
நலியுமிவையெனஞ்யுமொருபாற்
பலிபெறுதெய்வங்கண்மேலிட்டுப்பாற்றுங்
கலியவர்கையுட்கழியுமொருபால். (கஉசு)

கண்களினோக்கியுங்காதலினுள்ளியு
மண்களிடைவிட்டுவைகியும்புல்லியுந்
தண்கமழ்தார்மன்னதாயர்வளர்ப்புழி
யெண்களையின்றிடரெய்துமொருபால். (கஉஎ)

இன்னன துன்பமொடிவ்விலங்காகுந
ரென்னவரென்னினிவைநனிகேளினி
மன்னியமாதவமேற்கொண்டுமாயங்கள்
பின்னைமுயல்வார்பிறப்புமதுவே. (கஉஅ)

பொருளிடைமாயம்புணர்த்தும்பிறரை
மருளிகளாகமயக்குமவரு
மிருளுடையுள்ளமொடேதங்களெண்ணு
வருளிலவரும்வைநனிபவார். (கஉகூ)

பற்றொடுபெற்றிமுனிந்தார்பலபல
செற்றநவின்றார்செறுப்பொடுசென்றவர்
சுற்றமழிக்குந்துவர்ப்பகைதுன்னினர்
மற்றிவ்விலங்கெய்துமன்னுயிர்மன்னா. (கஙo)

இல்லையுயிரென்றுமில்லைபிறப்பென்று
நல்லனதீயனநாடிலவென்றும்
பல்லனசொல்லிப்படுத்துண்ணும்பாவிக
ணில்லாதுசெல்வுர்நிரோதகதியே. (கஙக)

மக்கட்கதித்துன்பம்.

மாகமழைவண்கைமன்னவமக்களு
மேதகதியினரேயவிகற்பினர்
சேகர்மிலேச்சர்மனிதர்கடிப்பியர்
போகமனிதரெனப்பொருட்பட்டார். (கஙஉ)

பத்துவகையபாதவிரேவதத்
தத்தகுகாலவிழிவினகத்தவர்
சித்தந்தெளிவிலர்சீலமடைவிலர்
செத்தவறிவினர்சேகரவரே. (கரு உ)

தீவினுள்வாழுங்குமானுடர்தேசத்து
மேவியுறையுமிலேச்சரெனப்பெயு
ராவரவருண்மிலேச்சரவரையும்
வீவருந்தாரோய்விலங்கினுள்வைப்பாம். (கரு ச)

வாலுநெடியர்வளைந்தவெயிற்றினர்
காலுமொரோவொன்றுடையர்கலேயிலர்
நாலுஞ்செவியர்நவைசெய்மருப்பினர்
சீலமடைவிலர்தீவினுள்வாழ்வார். (கரு ரு)

மக்கட்பிறப்பெனுமாத்திரமல்லது
மிக்கவெளிற்றுவிலங்குகளேயவர்
நக்கவுருவினர்நாணுவொழுக்கினர்
தொக்கனர்மண்ணேதுளைத்துண்டுவாழ்வார். (கரு சு)

பூவும்பழனுநுகர்ந்துபொழின்மர
மேவியுறையுமிலேச்சர்மிகப்பல
ரோவலர்வாழ்வதொரு * பளிதோபமென்
றேவல்சிலைமன்னவெண்ணியுணர்நீ. (கரு எ)

தேசமிலேச்சரிற்சேர்வுடையாரவர்
மாசின்மனிதர்வடிவினராயினுங்
கூசின்மனத்தர்கொடுந்தொழில்வாழ்க்கையர்
நீசரவரையுநீரினிழிப்பாம். (கரு அ)

கூடன்மிலேச்சர்குமானுடரென்றிவ
ரேடவிழ்தாரோயெவராபுவரெனிற்
கோடிக்குதர்க்கமுரைத்துக்குணங்களை
நாடினர்கொள்ளாநலமிலவரும். (கரு கூ)

---

* பளிதோபம்—பல்லம், அஃதோரெண்.

அடங்காமர்பினவர்கட்கடங்கார்
விடங்கார்மணந்தவிடக்கும்பிறவு
முடங்காய்ந்துணக்கொடுப்பாருமுயர்ந்தோர்
தொடங்காவினைகடொடங்குமவரும். (௧௪௰)

அன்னபிறவியுளாங்கவராபவ
ரின்னுஞ்சிலவரிழிகதிப்பாற்பட்டுத்
துன்னியபோழ்தேசுருங்கியொழிடவ
ரென்னும்பிறர்களறிவிற்கிகந்தார். (௧௪௧)

மக்கள்வதியுமிரண்டரைத்தீவினுட்
டக்கநிலத்துப்பிறந்தவர்தம்முளு
முக்குலத்தாரொடுங்கூடாமுயற்சிய
ரொக்கலைப்போல்வார்பலருமுளரே. (௧௪௨)

முக்குலத்தாரொடுமூடத்தொழுதியர்
தக்கதகாவென்பதோராத்தகையவர்
மக்களெனப்படுவாரலர்மற்றவர்
பக்கங்கிடக்கும்பதரெனக்கொண்ணீ. (௧௪௩)

நல்லிலங்கணலங்கொள்வடிவுக
ளில்லையமர்ந்துழித்தோன்றலெனவிவை
யெல்லையில்யோனிகளெல்லாமிகந்தெய்த
லல்லியந்தாரோயரிதுபெரிதே. (௧௪௪)

* அண்ணையலிகுருடாதியவர்களை
மண்ணுயர்ஞாலத்துமானுடராகவைத்
தெண்ணுநர்யாருளரெல்லாமமையினும்
பெண்ணின்பிறவியும்பீடுடைத்தன்றே. (௧௪௫)

எண்பத்துநான்கெனுநூறாயிரமுள
பண்பொத்தகாதிப்பவமென்பமற்றவை
கண்புற்றுந்தாரோய்களிப்பதொர்நல்வினைத்
திண்பற்றுடையவரிவ்வுடல்சேர்வார். (௧௪௬)

---

* அண்ணை—பேடி.

சார்ந்தபொழுதேதலைநாட்கருவினுள்
வார்ந்துவழுவாதமைந்துவளரினும்
மீர்ந்தண்கமழ்நறுந்தாரோயிடர்பல
கூர்ந்துவருபயாங்கூறவுலவா. (கசஎ)

குழவியருஞ்சுரஞ்சென்றுகுமர
வழுவவடவியரிதினிகந்தாற்
கிழவெனுமெல்லைகெழீயினர்சார்ந்து
வழுவினர்செல்வதும்மற்றோர்கதியே. (கசஅ)

ஆனைதுரப்பவரவுறையாழ்குழி
நானவிரபற்றுபுநாலுமொருவனோர்
தேனினழிதுளிநக்குந்திறத்தது
மானுடரின்பமதித்தனைகொண்ணீ. (கசகூ)

அன்பும்பிறவுமமைந்தாங்ககத்திருந்
தின்பங்கருதுமிருவர்க்கிடைபல
துன்பங்கடோன்றுந்தொடர்ப்பாடுளவெனின்
முன்பண்வயில்லெனின்முற்றுந்தொழிலே. (கரு0)

இன்னநிலைமையிதனுட்பிறந்தவர்
மன்னுமொன்றுண்டுவரத்தாற்பெறுவது
பொன்னியல்சேர் * கற்பபோகநிலங்களிற்
றுன்னுமுயற்சிதுணியுந்திறமே. (கருக)

துன்னுமுயற்சிதுணியுந்திறமவை
பன்னியுரைப்பிற்பலவாய்ப்பெருகினுந்
தன்னியறானந்தவமொடுபூசனை
யென்னுமிந்நான்கெனவெண்ணியுணர்நீ. (கருஉ)

தலையுமிடையுங்கடையுமாச்சாற்று
நிலைமையதானநிழன்மணிப்பூணோ
யுலைவிலேற்போனுடனீடவ்னீயு
மலைவில்பொருளின்னமாட்சியமன்னு (கருங.)

* கற்பபோகநிலம், போகநுகரும் பதினாறுகற்பலோகம்.

* ஐமையமைந்தார்க் † கெழுமையமைந்தவ
ரிம்மைகிளையா ‡ ரிமைபதமீவழி
¶ மும்மைக்கு o மும்மடங்காயமுறைமையிற்
பொய்ம்மையில்புண்ணியம்போர்க்கும்புகுந்தே. (கருச)

துறவியடக்கைபிறர்க்குநன்றாற்ற
லுறவினர்க்கோம்புதன்மெய்த்தலைப்பாடென்
றறிவரறைந்தாங்கிறைந்தனன்றானங்
குறைவிலனேற்பவற்கேற்றகுணனே. (கருரு)

போதிசைவாற்றல்பொன்றுதறுகட்ப
மீதற்கிவறுதலேற்பவர்மாட்டெழு
காதல்கழிபற்றிலாமைதெரிந்தறி
வேதமின்றீவான்குணமிவையேழே. (கருசு)

தானுமடங்கியடங்கினர்க்கேந்திய
வூனமுயிர்களுக்கெல்லாமுணர்வது
ஞானவொழுக்கம்பெருகுநலத்தை
யீனமின்பநிலங்கட்குவித்தே. (கருஎ)

கடைகின்றவருறுகண்கண்டிரங்கி
புடையதம்மாற்றலினுண்டிகொடுத்தார்
படைகெழுதானையபல்களியானைக்
குடைகெழுவேந்தர்களாகுவர்கோவே. (கருஅ)

ஊறுபலசெய்துயிர்கட்கிடர்செய்யும்
வீறில்பொருளைவினையவர்க்கீந்தவ
னேறும்பயனிஃதென்றினியான்சொல்லி
ஞிறிணர்த்தாரோய்நகுவதுடைத்தே. (கருகூ)

தன்கைப்பொருளுமிழந்துதனக்கொரு
புன்கட்கதிசெல்லும்வாயில்புணர்ப்பவன்
வன்கட்படகர்க்குவான்பொருள்கைக்கொடுத்
தென்கைப்பணிகொண்மினென்பவனொத்தான். (கசுo)

* விடயம். † சப்தகுணம். ‡ ஆகாரம்.
¶ கரணம். o நவக்கிரமம்.

ஒத்தகுணங்களமைந்தாங்குறுவர்க்குத்
தத்துவந்தேறியவன்செய்ததானங்கண்
* முத்திறத்துள்ளும்படாதுமுடிமன்ன
வுத்தமதேவருளுய்க்குமுணர்நீ. (கசுக)

மிக்கவிரதம்விரிபலவாயினுந்
தொக்கன † வைந்திற்சொலு ‡ மூன்றி ¶ னான்கினி
லொக்கவவற்றினாறுபயஞ்சொல்லிடிற்
றக்கவர்க்கொத்ததிற்றானங்குறைவே. (கசுஉ)

எல்லாவிரதமியல்பொக்குமாயினு
o மல்லாவிரதமனையாயவர்கட்குக்
கொல்லாவிரதங்குடைமன்னவாமெனின்
வெல்லாவகையில்லைவீங்கெழிற்றோளாய். (கசுங)

தம்மையுடையவர்தாங்குந்தவத்திய
லெம்மைவினவினெமக்குமுரைப்பரி
தும்மையுலகத்தொளிபடுமூக்கமோ
டிம்மையிகந்தார்க்கிசையுமதுவே. (கசுச)

தவஞ்செய்துவந்தார்தவநிலைநிற்பா
ரவஞ்செய்துவந்தார்க்கரிதுபெரிதும்
பவஞ்செய்துமாக்கள்பரியுமதுதா
னெவன்செய்துமென்னையீர்மலர்த்தாரோய். (கசுரு)

தெருண்டவர்மேற்கொளுஞ்செய்தவச்செல்வ
மிரண்டும்பலவுமியலாய்ப்பெருகு
மருண்டினியென்னவைவந்தபொழுதே
முரண்டருதோண்மன்னமுற்றவுணர்நீ. (கசுசு)

உலகங்கண்மூன்றுமுடையபெருமாற்
கலகையில்பூசனையாற்றமுயன்றாற்
றிலகுமிவரெனத்தேவர்களாவர்
விலகுஞ்சுடரொளிவீங்கெழிற்றோளாய். (கசுஎ)

* கர்ப்பம், உபவாதம், சம்மூர்ச்சனம். † அணு. ‡ குணம்.
¶ சிக்ஷை. o விரதமல்லாதது.

புண்ணியவாயிலெனநாம்புகழ்ந்துரை
கண்ணியநான்காயடங்கினுங்காவல
நுண்ணியநூல்வழிநோக்கிநுனித்தவ
ரெண்ணியவாயில்களின்னுமுளவே. (கசுஅ)

அருளுக்கேற்றருளுங்குணத்தின்கணூர்வமும்
பொருளொன்றுசேரும்புகழ்ச்சிநிகழ்வு
மருளிறவமும்வாவியஞானமு
மிருளறுதியானநிகழ்வுமென்றேழே. (கசுகூ)

ஆருயிர்யாதொன்றிடருறுமாங்கதற்
கோருயிர்போலவுருகியுயக்கொள்ள
நேரினதுமுடியாதெனினெஞ்சகத்
தீரமுடைமையருளினியல்பே. (கஎ0)

வையினும்வாழ்த்தினும்வாளாவிருப்பினும்
வெய்யமுனிதல்குளிர்தல்வெறுப்பொடு
மையன் * மும்மூடப்பகுதிமயக்கின்மை
செய்யமனத்தோர்தெருளின்றிறமே. (கஎக)

அறிவரடிமுதலார்வம்பெருக்க
லுறுவரொழுக்கமுவத்தன்முதலா
விறுதியில்பல்குணநோக்கமென்றின்ன
செறிதலிலார்வங்கள்செல்வந்தருமே. (கஎஉ)

ஆற்றல்வகையாலருந்தவமேற்கொண்டு
நோற்றுநுனித்தலொழுக்கந்தலைநிற்றல்
போற்றியுரைத்தல்புகழ்ச்சிநிகழ்விஃ
தேற்றுமிருவிசும்பீர்மலர்த்தாரோய். (கஎந)

அற்ற † துவர்ப்பினராகுமருநிலை
யுற்றவர்க்கிவ்வுரொழுக்கந்தலைநிற்ற
னற்றவமென்றிங்குநாங்கண்மொழிந்தது
மற்றிதுவானுலகாள்விக்குமன்னு. (கஎச)

---

* லோகமூடம், தேவமூடம், பாஷண்டிமூடம். † அறுவகைத்துவர்ப்பாவன ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், சுகுச்சை.

நூற்பொருள்கேட்டுநுனித்தோருணர்வது
மாற்படைகூட்டுமயங்கிருடீர்ப்பது
மேற்படைமெய்ம்மைவிளக்கும்விளக்கது
நாற்படையோய்நல்லஞானநிகழ்வே. (களரு)

சென்றுபெருகுந்தியானநிகழ்ச்சியு
மொன்றவுரைப்பினொரு * நால்வகைப்படு
நன்றியின் † மாற்றினைநல்குமிரண்டல்லன
வென்றிவிசும்பொடுவீடுந்தருமே. (களசு)

போற்றியபுண்ணியப்பொற்சுண்ணமுன்புகழ்
வாற்றிமுயல்வார்க்ககநிழ்வாமவை
மாற்றியவற்றைமறுதலையாக்கொளிற்
பாற்றியுழப்பிக்கும்பாகநிகழ்வே. (களஎ)

காட்சியெனும்பெயர்க்கதிர்விளக்கேற்றிய
மாட்சியுடையார் ‡ வதமிலராயினு
மாட்சிகரிதன்றமருலகல்லது
மீட்சியில்பேரின்பவெள்ளத்துழவே. (களஅ)

மெய்ப்பொருடேறுதல்காட்சிவிளக்கது
செப்படுமாயின்வினையென்னுந்தீயிரு
ளப்படிமானுநிலையன்றதனைநின்
கைப்பொருளாக்கொள்கதிர்மணிப்பூணோய். (களகூ)

தெய்வமனிதரவரைத்தெளிவுறி
னையவிசயனுமாழிவலவனு
மெய்தவிவர்முதலீரொன்பதின்மரிவ்
வையமருளவருநருளரே. (கஅ0)

ஆழியிழந்தவயகண்டனுதியாப்
பாழிவலவன்பகைவர் ¶ மும்மூவரும்
வீழவுரைத்தேன்வியன்பெருஞாலத்து
ளூழிதொறாழியுலப்பிலகண்டாய். (கஅக)

* ஆர்த்தம், ரௌத்திரம், தர்மம், சுக்கிலம். † மாற்று—ஜனனமரணம். ‡ விரதம். ¶ நவப்பிரதிவாசுதேவர்.

தேயவினைவெல்லுகதெய்வமனிதரு
ணீயுமொருவனேநின்குலத்தாதிக்கட்
பாயவிழுச்சீர்ப்பரதனையுள்ளுறுத்
தாயதிகிரியவருமவரே. (கஅஉ)

தீர்த்தஞ்சிறக்குந்திருமறுமார்பரும்
பேர்த்துப்பிறவாப்பெருமைபெறுநரு
மோர்த்திவ்வுலகினுளுத்தமர்மற்றவர்
தார்த்தங்குமார்பதவத்தின்வருவார். (கஅங)

வேறு.

தக்கமிகுதானமுதலாயதலைநிற்கு
மக்களிவராவர்மதயானைமறவேலோய்
புக்கவருளேபடுவர்போகநிலஞ்சார்ந்தா
ரொக்கவவர்தன்மையுமுரைக்கவுலவாவே. (கஅச)

உத்தமர்களேனையிடையோர்கள்கடையோரா
முத்தகையராவரவர்மூரிநெடுவேலோய்
பத்துவகை * பாதவமியற்றியபயத்தா
லத்தகையசெய்கையுமவர்க்கனையகண்டாய். (கஅரு)

அங்கிருவர்தம்பதிகள்செய்கையையறைந்தா
லிங்கிருவர்செய்கைதமையெண்ணியறிவாய்நீ
தங்குரவரோடிருவர்மாறிருவர்தாமா
யிங்கிருவர்தேவர்கள்வளர்ப்பவியல்கின்றார். (கஅசு)

நக்ககுழவிப்பருவநாற்பதினொடொன்பா
னக்கவருநாள்கள்கலையோடுடனிறைந்தான்
மிக்கவொளிசூழ்ந்துமிளிர்மேனியவராகித்
தக்கவிளமைப்பருவமெய்தினர்கடாமே. (கஅஎ)

கொம்பழகுகொண்டகுழைநுண்ணிடைநுடங்க
வம்பழகுகொண்டமணிமென்முலைவளர்ந்தாங்
கும்பவழவாயுளணிமுள்ளெயிறிலங்கச்
செம்பவளமேனியவள்கன்னிமைசிறந்தாள். (கஅஅ)

* பாதவம்—கற்பகவிருக்ஷம்.

நீலமணிகண்டனையகுஞ்சிகணிறைந்தான்
ஞாலமணிகொண்டநளிர்தாமரைமுகத்தான்
கோலமணிமால்குவடுகுங்குமமடுத்தாற்
போலுமணிமேனியொடுகாளைபொலிவுற்றான். (கஅகூ)

தாதுபடுசண்பகமிகந்தநறுமேனிக்
காதுபுனைகாமர்குழைபொற்சுருளைமின்ன
மீதுபடுகற்பகவிளந்தளிர்மிலைச்சிப்
போதுபுனைகோதையவள்பூம்பொழிலணைந்தாள். (ககூ0)

பவழவரையன்னதிரடோட்பரவைமார்பன்
றவழுமணியாரமொடுதார்மணிதயங்கக்
* கவழமனைமேவுகளியானையெனவந்தாங்
கவிழுமலரீர்ம்பொழிலுளையனுமணைந்தான். (ககூக)

கன்னியவண்மேலிளையகாளையிருகண்ணு
மன்னுகமழ்தாமரையின்வாயிதழலங்கல்
பின்னியெனவீழ்ந்தபிணையன்னவவள்கண்ணுந்
துன்னுமிருநீலமெனவந்தெதிர்துதைந்த. (ககூஉ)

நையுமெனநின்றவிடையாள்குணமேர்நான்கும்
வையமகிழ்காளையிவன்மாண்டகுணநான்கு
மையெனவகன்றனவணைந்தனர்கனிந்தார்
மெய்யுமிடைவுற்றவிதுவால்விதியின்வண்ணம். (ககூ௩)

அன்றுமுதன்மூன்றளவுபல்லமுடிகாறுஞ்
சென்றுபெருகிக்களிசிறந்துநனிகாம
மென்றுமிடையின்றியிமையாரினுகர்வார்க்கு
நின்றதுபிராயமதுவேகிழலும்வேலோய். (ககூச)

கங்குலவணில்லைகலியில்லைநவில்லை
யங்கவர்கணுளிடைகழித்தமிர்தயின்று
லெங்குமிலவின்பவெழிலெய்தறுமீதாற்
றங்கியதவத்தரசர்க்கீந்தபயன்றானே. (ககூரு)

* ழகரளகரப்போலி.

அன்னமிகுபோகமவரெய்திவிளையாடி
முன்னமுடிபல்லமவைமுன்றுடன்முடித்தாற்
பின்னுமவர்தம்வழிபிறந்தவரைநோக்கி
மன்னுமினிதேறுவதுவானுலகமன்னு. (ககசு)

பல்லமுதலோர்பகுதிமுன்றிரண்டுமொன்று
மல்லவிருவர்க்கமிர்துமம்முறையினேறு
நலலகிலங்காலமுயர்வென்றிவைகணூடிச்
சொல்லவுலவாவிவர்கள்செய்கைசுடர்வேலோய். (ககள)

செம்பவழம்வெண்பளிங்குபைந்தளிர்சிறக்கும்
வம்பழகுகொண்டமணிமேனியவர்பூவார்
கொம்பவிழுஞ்சண்பகங்கண்முல்லையிணர்க்கோங்க
மம்பவழவண்ணமுதலானவர்மெய்நாற்றம். (ககஅ)

நலங்கண்மிகுநம்முலகினன்மைமிகுநீராற்
புலங்கண்மிகுபோகமொடுபோககிலத்துள்ளால்
விலங்கொடுளவாழ்பறவையவ்வுடம்புவிட்டாற்
கலங்கண்மிகுகற்பகிலமேறுவனகண்டாய். (ககக)

வேறு. தேவர்கதித்துன்பம்.

பூவிரியுநறுமேனிப்பொன்னிலங்குகிமிர்சோதித்
தேவர்கட்திறமுரைத்தறேவருக்குமரிதெனினு
நாவிரவிநாமுரைப்பநால்வகையாய்விரியுமவை
யோவரியபெரும்புகழாயொருவகையாலுரைப்பக்கேள். ()

ஈரைவர்பவணர்களுமிருநால்வர்வியந்தரரு
மோரைவர்சோதிடருமொருபதின்மேலறுவரெனுங்
காரையமுறுவகையாய்கற்பகருமீயுலகிற்
சீரையமில்லாததிருமலர்த்தார்த்தேவரே. (உ0க)

உற்றவர்க்குமேலவர்க * ளொன்பதின்ம † ரொன்பதின்மர்
மற்றவர்க்குமேலவ ‡ ரைவகையரவர்மேலவர்க
ளிற்றரைதெண்வகையாமிவர்க்கென்றுமில்லாத
செற்றநோய்செயிர்பகையென்றிவைமுதலசெலவுணர்நீ. ()

* நவக்கிரைவேயகம். † நவாநுதிசை. ‡ பஞ்சாநுதிசை.

அருமணியினொளிகிழற்றுமாயிரமாம்பணமணிந்த
திருமணிசேர்முடியவருந்தீயொழுகுசிகையருமாப்
பருமணியபடலஞ்சேர்பவணத்துப்பதின்மர்களொண்
குருமணிகொணெடுமுடியாய்கூறுபாடுடையவரே. (௨0௩)

கின்னரர்கண்முதலாயவியந்தரரைக்கிளந்துரைப்பி
னின்னகரருலகத்துளெவ்வழியுமுளராகி
மென்னரம்பினிசைகேட்டும்வெறியயர்வுகண்டுவந்து
மன்னவரைவணங்கியுந்தம்மனமகிழ்வரொருசாரார். (௨0௪)

குலகிரியுமலையரசுங்குளிர்பொழிலுநளிர்கயமும்
பலகிரியுந்தீவகமும்படுகடலும்படிநகரு
முலகிரியவெளிப்பட்டுமொளிகரந்துமுறைந்தியல்வ
ரலகிரியும்பலகுணத்தோயமரர்களேனைப்பலரே. (௨0௫)

சந்திரருஞ்சூரியருந்தாரகையுநாண்மீனும்
வெந்திறலகோட்களுமாமெனவிளங்கிவிசும்பாரு
மந்தரத்தைவலஞ்சூழ்ந்துவருபவருநிற்பவருஞ்
சுந்தரஞ்சேர்மணிமுடியாய்சுடர்பவுஞ்சோதிடரே. (௨0௬)

எண்ணியமுத்தேவர்களுமிவர்மடந்தையவருமாய்க்
கண்ணியறாநற்காட்சிக்கதிர்விளக்குத்தூண்டினார்
நண்ணுபவோவெனினண்ணார்நல்விரதந்தலைநின்று
புண்ணியங்கள்படைத்தாரக்குழுவினிடைப்பொலிவாரே. ( )

காதலரிற்பிழையாராய்க்கள்ளுண்றேன்கடிந்தகற்றி
யீதலோடில்லிருக்குமிளம்பிடியார்முதலாயா
ரோதினமுத்தேவராயுயர்ந்தவர்க்குளுயர்ந்துளராய்ச்
சோதியும்பேரெண்குணனுந்துப்புரவுந்துன்னுவரே. (௨0௮)

மந்தரமாநெடுமலையின்மேற்றகத்துமேற்கூற்றி
னந்தரப்பேருலகத்துளமரரைமற்றறையுங்கா
லிந்திரவில்லெனவெளிப்பட்டிமையவர்கடொழுதேத்தச்
சுந்தரநன்மணிப்படிவமெனச்சுடர்ந்துதோன்றுவரே. (௨0௯)

அலர்மாரிமேற்சொரிவாரமிர்தநீராட்டுவார்
பலமாண்டகலனணிந்துபலாண்டிசைப்பார்பாடுவார்
மலர்மாண்டமணிக்கவரிமருங்கசைப்பார்மடந்தையரைச்
சிலர்மாணச்சேர்த்துவார்தேவராயதுபொழுதே. (உகo)

ஆடாதுமொளிதிகழுமாரணங்குதிருமேனி
வாடாதகண்ணியினர்மழுங்காதபூந்துகில
ரேடார்ந்ததொங்கலராயின்பநீர்ப்பெருவெள்ள
நீடாரக்குளித்தாடுகிலேமையரேயவரெல்லாம். (உகக)

பொன்மாடநெடுநிலத்தார்புகலமளியணைமேலார்
கன்மாடுபொன்வளருங்கதிர்மணிக்குன்றதன்மேலார்
மின்மாடுமிளிர்ந்திலங்குவிமானத்தாரெனினல்லாற்
சொன்மாடுபிறிதில்லைச்சுவர்க்கஞ்சேர்ந்தவர்கட்கே. (உகஉ)

கந்தருவக்கோட்டியுள்ளார்கண்கனியநாடகங்கண்
டிந்திரனோடினிதினிருந்திளம்பிடியார்பாராட்டச்
சுந்தரமாமணிமாடச்சூளிகையரெனினல்லா
லந்தரமேற்பிறிதில்லையமருலகடைந்தவர்க்கே. (உகங)

கந்தாரங்களித்தனையபனிமொழியார்கண்கவர
மந்தாரவனத்திடையாமணிமுழவினிசைவரங்க
மந்தாரமணியரங்கினெனும்வார்த்தையவையல்லாற்
செந்தாரோய்தேவர்கள்செய்திறற்றொழின்மற்றுடையரே.()

* தீர்த்தங்கடிறந்தவர்க்குச்சிறப்போடுதிசையெல்லாந்
தேர்த்தங்கணொளிபரப்பச்செல்பொழுதுந்தம்முலகிற்
கார்த்தங்குமயிலனையார்காமஞ்சேர்கனிகோட்டி
தார்த்தங்குவரைமார்பதம்முருவினகலாரே. (உகரு)

இமையாதசெங்கண்ணரிரவறியார்பகலறியா
ரமையாதபிறப்பறியாரழலறியார்பனியறியார்
சுமையாகிமணிமாலைசுடர்ந்திலங்குநெடுமுடியா
ரணுகாதநல்லுலகினைதைமணிப்பூணமரரே. (உகசு)

---

* தீர்த்தகரபரமதேவர்கள்.

அணுவளவாய்ச்சிறுகுதன்மற்றதிநுட்பமிகப்பெருக [ப்
னணியவர்போனினைத்துழியேநண்ணுறுதல்விழைதகைமை
பணியினமைத்திடல்குறிப்பிற்பலவுருவுநனிகோட
றுணிவமையுநெடுவேலோய்சுரருடையகுணங்களே. (உகஎ)

அளிதருஞ்செங்கோலுடையோயமரருக்குமந்தரமுன்
டொளியோடுபேரின்பமுயர்ந்தவர்க்கேயுயர்ந்துளவாந்
தெளிதருநற்காட்சியதுதிருந்தியமேனெடுந்தகையோர்க்
கெளிதகவும்பெரும்பாலும்பெறலேனோர்க்கரியவே. (உகஅ)

கனைகதிராக்கதிர்கலந்துகண்ணிலங்குதிருமூர்த்தி [ன்மேல்
புனைகதிரொண்மணிப்படிவம்பொழிந்ததுபோற்பொலிந்தத
வனைகதிரின்மணிமுடியும்மாணிக்கக்கடகமுமென்
றினமுதலாச்சுடர்ந்தினிதினியல்பாய்நின்றெரியுமே. (உககூ)

செழுந்திரட்பூம்பாவைகளுந்திகழ்மணியின்சுடர்க்கொழுந்து
மெழுந்திலங்குமேனியராயெரியுமணிக்கலந்தாங்கி
மொழிந்துலவாக்காரிகையார்முலைமுற்றாவிளமையா
ரழிந்தலராக்காரிகைமாரமரரசர்தேவியரே. (உஉ௦)

இன்பமேபெரிதாகியிடையறவின்றிமைப்பளவுந்
துன்பமொன்றில்லாததுறக்கத்திற்பெருஞ்செல்வ
மன்பெருமாதவத்தினல்வருமொருநாளீறுடைய
* தன்பதன்கண்மிசையேயென்றடிகடருபொருடெளிந்தார்.

பவணத்தார்க்கொருகடலாமிகையமரும்பல்லமொன்று
மிவணைத்தவமரருக்குமிருவிசும்பிற்சுடரவர்க்குஞ்
சிவணைத்தவுயர்வாழ்நாள்சென்றபினர்ச்செல்கதியு
மவணைத்தத்தமதுவிதிவகையாமதிபதியே. (உஉஉ)

இரண்டாகுமுதலவர்கட்கேழிரைந்திரேழாய்த் [டா
திரண்டிரண்டாய்மூவுலகத்தொழிந்தவர்சேர்பிரண்டிரண்
யரண்டகவந்தேறிப்பினாரணவச்சுதருலிகின்
மருண்டாயமணிமுந்நீர்பதினொன்றற்கிருமடியே. (உஉ௩)

* ஐம்பதுபல்லம்.

ஆங்கவர்மேலமரரசர்மும்மூவர்க்கொரோரோவொன்று [ர்
யோங்கினர்மேலொன்பதின்மர்க்கொன்றொன்றுயவர் மேலா
பாங்கினுறப்பெறுருவனபதினொந்திற்கிருமுடிமேல்
வாங்கொர்வீரொருமூன்றுவாழ்வென்பமணிமுடியாய். ()

ஆயிடையவமரரசர்திறம்வினவினணங்கனையார்
வேயிடைமென்பணைப்பொற்றோள்விழைவின்றிப்பெரிதாகி
யேயிடையோரறவின்றுவின்பஞ்செய்திருமூர்த்தி
சேயிடையொள்ளொளிகிழற்றச்செம்மாக்தாரிருந்தாரே. ()

ஊனிலாவுறுப்பமையவொளியமாயுலகெல்லாம்
பானிலாப்பரந்தெறிப்பப்பளிங்கினதுபடிவம்போன்
மேனிலாமணியனையார்வெண்சங்கே * றிலேச்சையாங்
கோனிலாவவரின்மிக்கவரில்லைக்குடைவேந்தே. (உஉசு)

அப்பால † தத்திதியாமதனிலமைந்தாலுணின்
றெப்பாரும்பிறிதிவணின்றாழிகாட்பெயர்ந்திழிவின்
றெப்பாலுந்திரிவின்றோரியல்பாயவின்பத்தான்
மெய்ப்பாலதவ்வரைச்சீற்றிருக்கும்வியனுலகே. (உஉஎ)

கதிநான்குங்கதிசேரும்வாயிலுமிவ்விவையதனுல்
விதிமாண்டநரகமும்புன்விலங்குகளுஞ்சேராமை
மதிமாண்டநற்காட்சிவழிநின்றுதவந்தாங்கி
னிதிமாண்டபெருஞ்செல்வநீங்காதவியல்பென்றான். (உஉஅ)

உறுதிகணன்குரைக்குங்காலுபசாரமுரைப்பதோ
அறுதியில்பேரருளீரென்றரசனுங்கடிதொழுவு
மிலுதியிலாப்பேரின்பமெய்துமாறெடுத்துரைத்தான்
மறுதரவில்கதிபடருமாதவத்துவரம்பாயோன். (உஉகூ)

துறவுச்சருக்கம் முற்றிற்று.

ஆ விருத்தம் - உகூ௫.

---

* இலச்சை—வர்ணம். † அத்திதி—அஸ்தித்துவம்.

பன்னிரண்டாவது

முத்திச்சருக்கம்.

இருவகைவினைகளுமில்லதிவ்வழி
வருவகையிலாததுமறுவின்மாதவர்
பெருவழியாச்செலும்பெயர்வில்சூளிகைக்
கொருவழியல்லதிங்குரைப்பதில்லையே. (க)

பிறந்தவன்பொறிப்புலக்கிவருமப்புலஞ்
சிறந்தபின்விழைவொடுசெற்றஞ்செய்திடு
மறைந்தவைவாயிலாவினைகளீட்டினு
னிறந்தவன்பின்னுமவ்வியற்கையெய்துமே. (உ)

பிறவிச்சக்கரமிதுபெரிதுமஞ்சினன்
றுறவிக்கட்டுணிகுவன்றுணிந்துதூயனு
யுறவிக்கணருளுடையொழுக்கமோம்பினன்
மறவிக்கணிலாததோர்மாட்சியெய்துமே. (ங)

காட்சியுஞானமுங்கதிர்த்துத்தன்பொறி
மாட்சியைவெலீஇமனந்தூயனுயபி
ஞட்செய்தூஉவிற்றியதியானவீதியான்
மீட்சியில்வீட்டுலகெய்தும்வீரனே. (ச)

கடையிலெண்குணத்ததுகாமராகர்க
ளிடைநனியிலாததில்லியற்கையில்லது
மிடையொடுவிழைவுவேறுத்தவீரர்க
ளடைவதோர்நிலைபிறர்க்கறியலாகுமோ. (ரு)

மணிமலர்ந்துமிழொளிவனப்புஞ்சந்தனத்
துணிமலர்ந்துமிழ்தருந்தண்மைத்தோற்றமு
நணிமலர்காற்றமுமென்னவன்னதா
லணிவருசிவகதியாலுதின்பமே. (சு)

வடுவறுமாதவனுரைப்பமீண்டுடை
யடிகளதறவமிர்துண்டவாற்றலான்
முடிவுகொளுலகெய்தமுயல்வனென்றனன்
விடுகதிர்மணிமுடிவென்றிவேந்தனே. (எ)

மிக்கெழுபோதிகைவிலக்கறக்கதன்
றொக்கநன்றுடன்படலுலகமேன்றெனத்
தக்கவாய்மொழித்தவத்தாசனேர்ந்திலன்
றொக்கவான்புகழவறகமைச்சர்சொல்லினர். (அ)

இருட்பிலத்தரும்படரெய்திப்பல்புகழ்
வருட்டதையிலனவிந்துண்ணவாழ்பவன்
பொருட்டகுவாயில்பெற்றுய்ந்துபோம்வழி
யுருட்டுவானொருவனையுவந்துநாடுமோ. (கூ)

அருஞ்சிறைப்பிணியுழந்தலைப்புண்டஞ்சுவான்
பெருஞ்சிறைதனைப்பிழைத்துய்ந்துபோயபின்
கருஞ்சிறைக்கயவர்கைப்பட்டுவெந்துயர்
தருஞ்சிறைக்களமதுசென்றுசாருமோ. (க0)

பிணிபடுபிறவிநோய்பெயர்க்குமாதவந்
துணிபவன்றன்னொடுதொடர்ச்சிநோக்குமோ
வணிமுடிதுறமினெம்மடிகளென்றனர்
மணிமுடிமன்னவற்கமைச்சரென்பவே. (கக)

எனவவர்மொழிதலுமெழுந்துபோதியின்
சினைமலரிலங்குவேற்சிறுவர்தங்களை
வனமலர்க்கண்ணியான்கூவிமற்றவர்க்
கினவிலானிவ்வுரையெடுத்துச்செப்பினன். (கஉ)

பொருளிலார்க்கிவ்வழிப்பொறியின்பேர்கழு
மருளிலார்க்கறத்தினும்பயனுநூல்வழி
யுருள்விலாமனத்தவர்க்குணர்வும்போன்மனந்
தெருளிலார்க்கிசைவிலடிருவின்செல்வியே. (கங)

திருமகணிலைமையுஞ்செல்வர்கேட்டிரேன்
மருவியமனிதரையிகந்துமற்றவள்
பொருவறுபுகழினர்புதியகாமுறு
மொருவர்கண்ணுறவிலளுணர்ந்துகொண்மினே. (கச)

புண்ணியமுலர்ந்தபின்பொருளிலார்களைக்
கண்ணிலர்துறந்திடுங்கணிகைமார்கள்பேர்.
லெண்ணிலளிகந்திடும்யாவர்தம்மையு
நண்ணியநண்பிலணங்கைவண்ணமே. (கரு)

உற்றுநன்கொருவர்கண்ணிற்குமாய்விடின்
மற்றவர்குணங்களைமறைத்துமாண்பிலாச்
செற்றமுஞ்சினங்களுஞ்செருக்குஞ்செய்திடுங்
கற்றவர்தம்மையுங்கழறநோக்குமே. (கசு)

அம்பெனுநெடியகட்கணிகையார்தமை
நம்பியவிளையவர்பொருளினையுமால்
வம்பினமணிவண்டுவருடுந்தாமரைக்
கொம்பினைமகிழ்ந்தவர்குணங்களென்பவே. (கஎ)

ஆதலாலவடிறத்தன்புசெய்யன்மி
னேதிலாரெனவிகழ்ந்தொழியும்யாரையுங்
காதலாராபவர்கற்றமாந்தரே
போதுலாமலங்கலீர்புரிந்துகேண்மினே. (கஅ)

நிலமகணிலைமையுநெறியிற்கேட்டிரேற்
குலமிலர்குணமிலரென்னுங்கோளிலள்
வலமிகுசூட்சியார்வழியண்மற்றவ
ளுலமிகுவயிரத்தோளுருவத்தாரினீர். (ககூ)

தன்னுயர்மணவினும்பலர்கடன்னல
முன்னுகர்ந்திகந்தவர்மூரித்தானையீர்
பின்னும்வந்தவரொடுஞ்சென்றுபோர்ந்தில
ளின்னுமஃதவடனதியற்கைவண்ணமே. (உ0)

வெற்றிவேன்மணிமுடிவேந்தர்தம்மொடு
முற்றதோருரிமைகளில்லள்யாரொடும்
பற்றிலள்பற்றினார்பாலளன்னதான்
முற்றுநீர்த்துகிலுடைமுதுபெண்ணீர்மையே. (உக)

அடிமிசையரசர்கள்வணங்கவாண்டவன்
பொடிமிசைப்புரம்புரளவிப்புற
மிடிமுரசதிரவொரிளவறன்றொடு
கடிபுகும்வளதுகற்பின்வண்ணமே. (உஉ)

இன்னனவிவடனதியற்கையாதலா
லன்னவள்பொருளெனவார்வஞ்செய்யன்மின்
மன்னுயிர்காவனும்மக்கடாங்கினுற்
பின்னைநுங்கருமமேபேணற்பாலிரே. (உங)

மீனிவர்விரிதிரைவேலிகாவன்மே
லானிவர்வேலினீருங்கள்பாலதால்
யானினியெனக்கரசாக்கலுற்றனன்
றேனிவரலங்கலீர்செவ்விகாண்மினே. (உச)

உற்றநாள்சிலவுமக்கென்னொடல்லது
மற்றநாள்பலவவைவருவவாதலாற்
கற்றமாண்சிந்தையீர்கவற்சிநீங்குமி
னிற்றையான்றுணிந்ததென்றிறைவன்செப்பினான். (உரு)

என்றலுமிளையவரிறைஞ்சிக்கைதொழு
தின்றியாமடிகளைப்பிழைத்ததென்னென
வொன்றுநீரிலீரெனவுரையொழிந்தரோ
வன்றவர்க்கயலவனாகிச்செப்பினான். (உசா)

ஆவியாயரும்பெறலமிர்தமாகிய
தேவிமார்தங்களைக்கூவிச்செவ்வனே
காவியாய்நெடுங்கணீர்கருதிற்றென்னென
மேவினார்தவமவர்வேந்தன்முன்னரே. (உஎ)

இமைப்பதும்பெருமிகையினியிருந்தென
னிமைப்புறுபிறவிநோய்நடுங்கநோற்கியு
வமைச்சருமரசர்கோனருளினுற்றம
சுமைப்பெரும்பாரத்தின்றொழுதிநீக்கினார். (உஅ)

அணிமுடியமரர்தந்தாற்றப்பாற்கடன்
மணிமுடியமிர்தநீராடிமாதவர்
பணியொடுபென்மணிக்கலன்கணீக்கினான்
றுணிவொடுசுரமைநாடுடையதோன்றலே. (௨௯)

அருமுடிதுறந்தனனரசனாயிடைத்
திருமுடிமணித்துணர்தேவர்கொண்டுபோய்ப்
பருமுடிநிரையனபரவைப்பாற்கடற்
பெருமுடியமைகெனப்பெய்யப்பட்டதே. (௩௦)

முரைசதிர்முழங்கொலிமூரித்தானையுந்
திரைசெறிவளாகமுஞ்சிறுவர்க்கீந்துபோ
யரைசருமாயிரரரைசர்கோனொடு
விரைசெறிமணிமுடிவிலங்கநீக்கினார். (௩௧)

முடிகளுங்கடகமுமுத்தினாரமுஞ்
சுடர்விடுகுழைகளுந்துளும்புபூண்களும்
விடுசுடர்க்கலங்களும்விட்டெறிந்தவை
படுசுடர்தாமெனப்பரந்திமைத்தவே. (௩௨)

வரிவளைவண்ணனுமறங்கொணேமியத்
திருவளர்மார்பனுஞ்செல்வன்சென்னிமே
லெரிவளர்மணிமுடியிழியுமாயிடைப்
புரிவளைக்கடலெனப்புலம்புகொண்டனர். (௩௩)

காதலராயினுங்காதல்கையிகக்
தேதிலராயினமடிகட்கின்றென
வூதுலைமெழுகினின்றுருகினாரவர்
போதலர்கண்களும்புனல்படைத்தவே. (௩௪)

முடிகெழுமன்னர்முன்னிறைஞ்சநம்மைத்தங்
கடிகமழகலத்துக்கொண்டகாதலெம்
மடிகளுமயலவர்போலவாயினார்
கொடிதிதுபெரிதெனக்குழைந்துபோயினார் (௩௫)

தாதுகவகலத்துத்தாமம்வாங்கியு
மீதுவந்தேதியுமேவல்செய்யுநங்
* கோதுகரியாவர்கொண்டாடுவாரெனப்
போதுகமுடியினர்புலம்பொடேகினர். (கூசு)

நின்றிலாநிலைமையினீங்கிநின்றதோர்
வென்றியாலுலகுடன்வணங்கும்வீரிய
மின்றுகோன்புரிந்ததற்கிரங்கல்வேண்டுமோ
வென்றுதானிளையரைமுனிவர்தேற்றினர். (கூஎ)

அணங்குசாலடிகள்தருளதாய்விடிற்
பிணங்கிநாம்பிதற்றியபேதைவாய்மொழி
குணங்கடாமல்லகோன்குறிப்புமன்றென
வணங்கினர்மணிமுடிமானவீரரே. (கூஅ)

திருவுடையடிகடஞ்சிந்தைக்கேதமாம்
பரிவொடுபென்னிநாம்பயிற்றிலென்றுத
மெரிவிடுசுடர்முடியிலங்கத்தாழ்ந்துபோய்
மருவுடைவளநகர்மன்னர்துன்னினர். (கூகூ)

பாற்படுசெல்வமும்பரவைஞாலமுங்
காற்பொடியாகவுங்கருதிற்றின்மையா
லேற்புடைத்தன்றுநம்மடிமையீண்டென
வேற்படைவீரனைத்தொழுதுமீண்டதே. (சும)

வேறு.

வேற்படைவிடுத்துவீரத்தவ்வரசதனைமேவி
நூற்படைமுனிவர்கண்ணுனோக்கியநயத்தனுகிப்
பாற்படுவிரதநோன்மைப்படைப்பெருந்தலைவரைவர்
மேற்படைசெய்யச்செல்லும் வினைவரைவிலக்கவைத்தான்.

குணப்படையிலக்கமெண்பான்குலவுநான்காகுஞ்சீலக்
கணப்படைபதினெட்டாகுமாயிரங்கருவியாகத்
துணைப்படைபிறர்க்குச்செய்யுந் † துன்னயத்தளவுநீக்கி[ன்.
மணப்புடைசிந்தையென்னு மடங்கதையைச்செறியவைத்தா

* கோதுகம்—சிராட்டு. † துன்னயம்—மித்தியாநயம்.

செறிவெனப்படுவமூன்றுசெழுமதில்செறியச்செய்து
பொறியெனும்வாயிலேந்துபொற்கதவடைத்துமாற்றி
யறிவமைசிந்தையின்மாட்டகம்படியுழையராக்கிக்
கறையி * லீரறுவர்நிற்பவிறைவராக்காக்கவைத்தான். (௪௩)

படைகெழுபுரிசைவெல்வார்புறநின்று † பதின்மர்காக்க
விடையவர்தம்முளாரேயுழைய ‡ ரீரறுவராக
வுடையதன்னுலகமூன்றுமொருவழிப்படுக்கலுற்று
மிடைகெழுவினைவர்தானைமெலியமேற்சென்றுவிட்டான். ()

பின்னணியோகுநான்மையபராகாத்திரம்பெற்றேனைத்
தன்னவயவங்கண்முற்றித்தயங்குநான்மனங்களோவா
துன்னியதிசையினுய்க்குமுணர்வெனும்வயிரத்தோட்டி
யின்னியன்ஞானவேழத்தெழிலெருத்தேறினானே. (௪௫)

தருக்கெயில்காப்புவாங்கத்தடக்கைமால்பகடுநுந்தித்
திருக்கிளர்குணமேற்சேடிச்செழுமலைக்குவட்டினேட்டி
முருக்கியவுருவுவேட்கைமுனைப்புலமகற்றிமுற்றிச்
செருக்கியவினைவர்வாழுந்திண்குறும்பழிக்கலுற்றான். (௪௬)

நிறையிலார்பொறுத்தலாற்றாநிலையிதுநிறைந்தகோன்மைக்
கறையி () லீராறுக்கொத்தகண்ணியர்கவரிவீச
முறையினற்பெருகுமுள்ளச்சமாதிநீர்முறுகவுண்ட [ன்.
குறைவிலாத்தியானமென்னுங்கொற்றவாளுருவிக்கொண்டா

விண்கடாஞ்செய்யும்வெய்யவினைவர்கட்காணமாகிக், கண்
கடாமறைக்குமோரேழ்கடிவினைபொடிசெய்திட்டுக், கொண்
கடாநவின்ற ¶ வீரெண்கொடிமதிற்கோட்டைகுட்டி, யெண்
கடாமுடைய o வெண்மர்குறும்பரையெறிந்துவீழ்த்தார். ()

ஈடிலர்வெகுளியுள்ளிட்டெண்மரையெறியத்தீயுட், ** வே
டுவந்தொன்றுபாய்ந்து முடிந்ததுமுடிந்தபின்னை, யோடிவந்
†† தொருத்திவீழ்ந்தாளுழையவ ‡‡ ரறுவர்பட்டார், நாட
வன்றானன்போழ்துக்கழித்துவந் ¶¶ தொருவனீழ்ந்தான். ()

* பிராணிவிஷயசம்யங்கள். † தசதர்மம். ‡ துவாதசானுப்பி
ரேக்ஷை. () பாகியாபியந்தரதபங்கள். ¶ சோடசகர்மம். o பிர
த்தியாப்பிரத்தியாக்கியாணம். ** நபுஞ்சகவேதம். †† ஸ்திரி
வேதம். ‡‡ அறுதுவர்ப்பு. ¶¶ புருடவேதம்.

பின்னுமோர்நால்வர் * தெவ்வர்முறைமுறைபிணங்கிவீழ்ந்
ரன்னவர்தம்முளானைகுறைப்பிணமொருவனாகித் [தா
தன்னைமெய்ப்பதைப்பநோக்கியவனையுந்தபுப்பநோனார்
துன்னியதுயிலுமேனைத்துளக்குஞ்செய் † திருவர்பட்டார்.

ஆங்கவரழிந்தபின்னையரச ‡ ரையிருவரோடுந்
தாங்கியீரிருவர்தாக்கித்தலைதுணிப்புண்டபின்னை
வீங்கியவனந்த ο ஞான்மைவிழுங்கிமுழுதுங்கைக்கொண்
டோங்கியவுலகிற்கெல்லாமொருபெருங்கிழவனானான். (ருக)

நெடிதுடனாயதெவ்வர் ¶ நால்வரைநீறுசெய்திட்
டடிகள்பின்முடிவென்பாளையகப்படுத்தனையராக
விடிமுரசதிருந்தானையரசரோடிங்கணீண்டிக்
கடிகமழமரர்வீரன்கடிவினைமுடிவித்தாரே. (ருஉ)

கொடிகளுங்குடையுங்கோலக்கவரியுமமரர்தங்கண்
முடிகளுமடந்தைமாருமுகிழ்நகைக்கலங்களுஞ்செற்
றடியிடுமிடமின்றாகிமூடியாகாயமெல்லாங்
கடிகமழ்மலருஞ்சாந்துஞ்சுண்ணமுங்கலந்தவன்றே. (ருங)

பொன்னரிமாலைபூவின்பொழிமதுப்பிணையன்முத்தின்
மின்னிவர்விளங்குந்தாமமெனவிவைவிரவிவீசித்
துன்னியவினைவர்கூட்டந்துணித்துவீற்றிருந்தகோனைப்
புன்னியதுதியராகியமரர்கள்பரவுகின்றார். (ருச)

வேறு.

கருமால்வினையரசுகாறளரநூறிப்
பெருமான்முடிவென்னும்பெண்ணரசிதன்னை
யொருவாமைவேட்டெய்தியூழியெயர்ந்தாலும்
வருமாறிலாதவளநகரம்புக்கானே. (ருரு)

சிந்தைமடவாடொடுத்ததியானவாள்
வெந்துவினைவேந்தர்வீடியபின்விட்டெறிந்து
முந்துமுடிவென்னுங்கன்னிமுலைமுயங்கி
வந்துபெயராவளநகரம்புக்கானே. (ருசு)

* சஞ்சுவலனம். † நித்திரை—பிரசலை. ‡ உணர்வு, ரு. பேறு, ரு. காட்சி. சு· ο ஞானம், தெரிசனம், சுகம். ¶ ஞானாவரணீயம், அந்தராயம், தெரிசனாவரணீயம், மோகனீயம்.

அலகில்பெருங்குணத்தோனுவரணநீக்கி
யுலகமலோகமுடனேவிழுங்கிப்
புலவன்முடிவென்னும்பூங்கொடியுந்தானு
நிலவுசிவகதியுணீங்காதுநின்றார். (௫௭)

வேறு.

இனையனபலபரவியிறைஞ்சியேத்தியிமையவர்கள்
கனையெரிமிகுவேள்விகலந்துசெய்துகளிப்பெய்தி
யனையவரறவாழியமிர்தநீங்காதகத்தாடிப்
புனையவிர்சுடரொளியார்புகழ்ந்துதத்தமிடம்புக்கார். (௫அ)

களங்காண்வகையுடைந்துகாலர்காமர்கையகல
விளங்காத்திசையின்றிவிளங்கவீரன்மெய்ப்பொருளை
யுளங்காண்கேவலப்பேரொளியாலிம்பருலகெல்லாந்
துளங்காதுயர்ந்துலகின்முடிக்கோர்சூளாமணியானான். (௫௯)

அருமால்வினையகலவமரர்நாளுமடிபரவப்
பெருமான்பிரசாபதிபிரமலோகமினிதாளத்
திருமால்பெருநேமிதிகழ்ந்தசெந்தாமரைத்தடக்கைக்
கருமால்கடல்வரைத்தகண்ணார்ஞாலங்காக்கின்றான். (௬௰)

தங்கோனமருலகமினிதினாளத்தரங்கநீர்ப்
பொங்கோதமதுடுத்தபூமியெல்லாம்பொதுநீக்கிச்
செங்கோலினிதோச்சித்தேவர்காப்பத்திருமாலு
மங்கோல்வேலரசரடிபாராட்டவாள்கின்றான். (௬௧)

வலம்புரிவண்ணனுமகரமுந்நீர்மணிமேனி
யுலம்புரிதோளினனுமுலகமெல்லாமுடன்வணங்கச்
சலம்புரிவினைவென்றதங்கோன்செந்தாமரையடிக்கீழ்
நலம்புரிவிழவியற்றிநாளுநாளுமகிழ்கின்றார். (௬௨)

முத்திச்சருக்கம் முற்றிற்று.

ஆ. விருத்தம் - ௨,௧௩௧.

சூளாமணி முற்றுப்பெற்றது.

உ

செய்யுளகராதி.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.	பக்கம்.	வரி.	பிழை.	[illegible]
கரு	கசு	நீட்டி	நீட்டிப்	கசுக	உஉ	திடுவாய்	திடுவ[illegible]
கசு	சு	அவிளுங்	அவிழுங்	உ0ங	சு	மாக்[illegible]	மக்[illegible]
உ0	உங	பருமணி	பரூஉமணி	உஉச	கரு	ரு[illegible]	ருச[illegible]
உங	உ	காவலர்க்	காவலற்	உஉஎ	சு	கை	கைக்[illegible]
உச	எ	பங்கை	மங்கை	,,	சு	[illegible]	[illegible]ணப்
ஙஎ	உசு	சூட்சிய	சூட்சிசார்	உஙக	அ	விரு[illegible]	விருந்தன
			ந்	,,	க0	நிழற்ற	[illegible]
சரு	கஎ	நங்கை	ணங்கை	உஙசு	உஅ	கயிலிடை	கய[illegible]டை
சசு	உ	மஃதே	மிஃதே	உஙசு	உங	மரையான்	மரையாள்
சஎ	எ	னன்றே	னென்றே	உருங	அ	ணுதா	ணு[illegible]
ருசு	சு	தெதிர்	தெரி	,,	உக	மஞ்ஞை	மாம[illegible]
அ0	உ0	கலர்	கலர்ப்				ஞை
அசு	ச	னீதி	நீதி	உசுங	ங	ஞடணி	நாட[illegible]
சுச	கக	வெரி	வெறி	உசுரு	ரு	வேழ்வி	வே[illegible]
கக0	கரு	மணிந்து	மணந்து	உசுசு	ங	புதலவ	பு[illegible]
ககஉ	கக	வாரொலி	வரொலி	உஎசு	எ	கோட்டத்	கே[illegible]
ககச	கரு	கடா	சுடர்	உஅஅ	உ	வளரினும்	வ[illegible]
கஉங	எ	லருகக்	லருக்க	,,	எ	கெழீயி	[illegible]
கஙஉ	உரு	லாவவன்	லாலவன்	உசு0	உசு	மூ[illegible]ச	மூர்[illegible]
கஙங	கசு	சுற்றுங்	சுற்றுத்	,,	ங0	வி[illegible]கமல்	[illegible]
கஙஎ	உ0	மிகுபுடை	மிகுபடை				
கஙஅ	கச	படைப்	படை				
கஙசு	கஎ	வணிவரை	மணிவரை				
கச0	உச	வணங்கி	வணக்கி				
கசங	உ0	ஞடன்	நாடன்	உசுரு	ங0	ச[illegible]	
கசசு	உ	பேந்தன்	வேந்தன்				
கருக	கச	பினரா	பினராய்	உசுசு	[illegible]	[illegible]து	
கருஅ	உரு	வேவிவி	வேள்வி	ங0சு	உசு	யங[illegible]	
கசுஅ	உக	சித்திது	சித்து	,,	ங0	கி[illegible]	
கஎச	உ	யெதிலா	யேதிலா	ங0எ	ங0	ச[illegible]ம்	
கஅஎ	உரு	கோற்	கொற்				

